**மாண்புமிகு பாரதப் பிரதமர் டாக்டர். மன்மோகன்சிங் அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் எழுதியுள்ள 23.5.2013 ஆம் நாளிட்ட நேர்முகக் கடிதத்தின் சாராம்சம்.**

"அண்மைக்காலத்தில் திருத்தியமைக்கப்பட்டுள்ளவாறான, 1957 ஆம் ஆண்டு, பிணையங்கள், ஒப்பந்தங்கள் (ஒழுங்குமுறை) விதிகளின் கீழ் செயற்கையாக முன்வைக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறைத் தேவைகளை ஏற்கும் வகையில், மத்திய அரசு, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் தான் வைத்துள்ள சமவீத பங்குகளில் 5% தொகையை திரும்பப் பெற கருதியிருப்பதாக நான் அறிகிறேன்.

நீங்கள் அறிந்துள்ளவாறு, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், தமிழ்நாட்டிலுள்ள பெரிய அளவிலான மத்திய பொதுத்துறை நிறுவனமாகும். இந்நிறுவனம், 17,500 தொழிலாளர்களுக்கும் மேற்பட்ட அளவில் வேலைவாய்ப்பு அளித்து, மாநிலத்தின் பின்தங்கிய மண்டலத்தில் அமைந்துள்ள பெரிய அளவிலான மத்திய மின் உற்பத்தி தொழில் நிறுவனமாகும். இந்நிறுவனத்தில், மத்திய அரசு, சமபங்கு தொகையில் ஒரு பகுதி தொகையை திரும்பப்பெறுவது தொடர்பாக எடுத்துள்ள முடிவு, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் தொழிலாளர்களுக்கிடையே ஓர் நியாயமான அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. அதிக அளவிலான தொழிலாளர்களுக்கு மீண்டும் உறுதியளிப்பதற்குப் பதிலாக, உண்மை போன்ற அடிப்படையிலும், செயற்கையான ஒழுங்குமுறைத் தேவைகளின் அடிப்படையிலும், இந்த சமபங்குத்தொகைகள் திரும்பப் பெறப்படுவதை, சம்பந்தப்பட்ட அமைச்சகமும், நிறுவன நிருவாகமும் நியாயப்படுத்த முயன்று வருகிறது. சமபங்குத்தொகைகள் திரும்பப்பெறும் கருத்துருவை ஏற்பதற்கு தொழிலாளர் சங்கங்களை அறிவுறுத்த வேண்டும் என்று, மாநில அரசின் ஒத்துழைப்பு கோரப்பட்டு வருகிறது. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் எந்தவொரு பகுதியும் தனியார் மயமாக்கப்படுவதை என்னுடைய அரசு தொடர்ந்து வலுவலாக மறுத்து வருகிறது மற்றும் சமவீத பங்குத்தொகையை குறைக்காமல், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தை ஓர் பொதுத்துறை நிறுவனமாக பராமரிக்க வேண்டும் என்பதே எங்களுடைய உறுதியான கருத்தாகும். 1957 ஆம் ஆண்டு பிணையங்கள், ஒப்பந்தங்கள் (ஒழுங்குமுறை) விதிகளில் அண்மைக்காலத்தில் செய்யப்பட்டுள்ள, ஒரு சில திருத்தங்களின் அடிப்படையில், மத்திய அரசு, ஓர் செயற்கையான ஒழுங்குமுறை இடர்ப்பாடுகளை உருவாக்க முயற்சிப்பதாக நான் இது தொடர்பாக அறிகிறேன். நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில், மத்திய அரசு தான் வைத்திருக்கும் சமவீத பங்குத்தொகையை குறைப்பதற்கு இந்த விதிகளின் அடிப்படையில் மேற்கோள் காட்டுவது, பொருத்தமாகவோ அல்லது விரும்பத்தக்கதாகவோ இல்லை.

பங்குகளின் ஒரு சிறு பகுதியைக் கூட திரும்பப்பெறக் கருதினால், அதன் விளைவாக தொழிலாளர்களிடையே பெருமளவில் கொந்தளிப்பு ஏற்படும். தற்போது, தமிழ்நாட்டில் கடுமையான மின் பற்றாக்குறை நிலவுவதால், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திலிருந்து கிடைக்கிற மின்சக்தியில் ஏதேனும் தடை ஏற்படுமாயின், அது, மாநிலத்தின் நலனை கடுமையாக பாதிக்கும். எனவே, பங்குகளை திரும்பப் பெறக் கருதுகிற செயற்குறிப்புக்கு பதிலாக, மாற்று வழிகளை ஆராயுமாறு நான் வன்மையாக வலியுறுத்துகிறேன்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் உள்ள பங்குகளில், மேலும் 5 சதவீதப் பங்குகளை திரும்பப் பெறுவதைத் தவிர வேறு வழியில்லை என்று தெரிவிப்பது சரியானதல்ல. இரண்டு தெள்ளத் தெளிவான விருப்புரிமைகள் உள்ளன. தற்போது பொதுமக்களிடம் உள்ள 6.44 சதவீதப் பங்குகளை SEBI விதிமுறைகளின் கீழ் மீண்டும் வாங்குவதன் மூலம் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், பட்டியலிலிருந்து நீக்கப்படலாம். இதற்கு மாற்றாக, 19(2) (c) விதியின் கீழ், தேவையான வரம்பு நிபந்தனை ஒன்றைக் கொண்டுவருவதன் மூலம், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்கு சிறப்பு விதிவிலக்கு அளிக்கிற வகையில், 1957 ஆம் ஆண்டு பிணையங்கள் ஒப்பந்தங்கள் (முறைப்படுத்தல்) விதிகளில் திருத்தம் கொண்டு வரப்படலாம்.

இந்தச் சூழ்நிலைகளில், மத்திய அரசு, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் வைத்துள்ள பங்குகள் மேற்கொண்டும் திரும்பப் பெறப்படாமலிருப்பதை அல்லது பங்குகளின் மதிப்பு படிப்படியாகக் குறைக்கப்படாமலிருப்பதை உறுதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு நான் உங்களிடம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இது தொடர்பாக விரைவில் பதில் அளித்தால், நான் மிகவும் நன்றி செலுத்துவேன்.